# சார்பெழுத்துக்கள்

முனைவர் செ. கஸ்தூரி

*இணைப் பேராசிரியர் மற்றும்*

*தமிழ்த்துறைத் தலைவர்*

*காமராஜ் கல்லூரி*

*தூத்துக்குடி*

**முன்னுரை**

திராவிட மொழிக் குடும்பங்களுள் மிகவும் தொன்மை வாய்ந்த மொழி தமிழ் மொழியாகும். தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பழைமை வாய்ந்த மொழியாகக் கருதப்படுகின்றது. தமிழ்மொழி தனக்கு மட்டுமே உரித்தான பல இலக்கிய இலக்கண மரபுகளைக் கொண்டமைந்துள்ளது. மேலும் தமிழ்மொழி தனித்து இயங்கும் செழுமை, தூய தனித்தன்மை, பல மொழிகளுக்குத் தாயாகும் தன்மை, பல நாடுகளில் பேச்சு மொழியாகத் திகழ்தல் போன்ற ஈடில்லாதத் தனிப்பெருமைகளை மிகுதியாகப் பெற்றுள்ளதால் அது உயர்தனிச் செம்மொழியாகப் போற்றப்படுகிறது.

செம்மொழியாம் நம் தமிழ்மொழியின் இலக்கண நூல்களுள் நமக்குக் கிடைக்கக்கூடிய மிகப் பழைமையான இலக்கண நூலாகத் திகழ்வது தொல்காப்பியமேயாகும். தொல்காப்பியத்திற்குப் பின்னர் பல இலக்கண நூல்கள் தமிழ் மொழியில் தோன்றினும் அவையாவும் தொல்காப்பிய இலக்கணக் கோட்பாடுகளை மையமாகக் கொண்டே பொரும்பான்மையும் படைக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையில் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள சார்பெழுத்துக் கோட்பாடுகள் தொல்காப்பியத்திற்குப் பிந்தைய இலக்கண நூல்களில் எங்ஙனம் வழிமொழிந்தும் புத்தாக்கம் பெற்றும் படைக்கப்பட்டுள்ளன என்பது விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது.

**சார்பெழுத்துக்கள்**

தொல்காப்பியம் சார்ந்துவரும் இயல்புடைய எழுத்துக்களாகக் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் எனும் மூன்று சார்பெழுத்துக்களைச் சுட்டுகின்றது. ஆனால் தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய இலக்கண நூல்கள் சார்பெழுத்துக்களின் எண்ணிக்கையைக் கூறுவதில் வேறுபட்டுக் காணப்படுகின்றன (அட்டவணை கட்டுரையின் பிற்பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது)

**ஆய்தம்**

உயிர், மெய், ஆய்தம் என்ற நிலையில் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள நெடுங்கணுக்குமுறை பிந்தைய வீரசோழியம் (எ.நூற்.1), நேமிநாதம் (எ.நூற்.1) ஆகிய இலக்கண

நூல்களில் உயிர், ஆய்தம், மெய் என மாற்றம் பெறுகின்றது. தொல்காப்பியத்தில் சார்பெழுத்தாகக் கருதப்படும் ஆய்தம் இந்நூலில் முதலெழுத்துக்களுக்கு இணையாக முதல்வைப்பு நிலையில் இடம் பெறுகின்றது. ஆய்தம் மொழி வழக்கில் அதிகமாகப் பயின்று வழங்கியமையாலும் வரிவடிம் உடையதாலும் இம்மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். இன்றைய நெடுங்கணக்கு முறையிலும் உயிர், ஆய்தம், மெய் என்ற நிலையே நீடிக்கின்றது.

ஆய்தம் பிறக்கும் இடத்தினைக் கூறுகையிலும் இலக்கண நூல்களிடையே வேறுபாடு காணப்படுகின்றது. தொல்காப்பிய உரையாசிரியர்களாகிய இளம்பூரணரும், நச்சினார்கினியரும் முறையே தலையினையும் நெஞ்சினையும் ஆய்தம் பிறக்கும் இடமாகக் கூறுகின்றனர். இலக்கண விளக்கமும் (எ.நூ.13), நேமிநாதமும் (எ.நூ) நெஞ்சினை இடமாகவும் நன்னூல் (எ.நூ.87), வீரசோழியம் (எ.நூ.6) ஆகிய நூல்கள் தலையினை இடமாகவும் முத்துவீரியம் (எ.நூ.58) உந்தியினை இடமாகவும் எடுத்துரைக்கின்றன. இக்கால மொழியியலார் ஆய்தம் நெஞ்சியினை இடமாகக் கொண்டு பிறக்கும் எனக் கூறுகின்றனர்.

தொல்காப்பியம் ஆய்தம் தனிமொழி, தொடர்மொழி எனும் இரு நிலைகளில் வருவதனை விளக்கிக் கூறுகின்றது. ஆனால் தொல்காப்பியத்தில் ஆய்தம் தனிமொழியில் வரும் எனக் கூறியதைப் பின்னர் தோன்றிய நன்னூல், தொன்னூல்விளக்கம், முத்துவீரியம் போன்ற நூல்கள் முற்றாய்தம் எனவும் தொடர்மொழியில் வருவதாகக் கூறியதனை ஆய்தக்குறுக்கம் எனவும் இரண்டு வகைகளாகப் பகுத்துக் கூறுகின்றன. இலக்கணவிளக்கம், வீரசோழியம் போன்ற நூல்கள் தனிமொழி ஆய்தத்தினை மட்டுமே குறிப்பிடுகின்றன.

ஆய்தம் தனிமொழியில் தனிக்குறிலுக்கும் வல்லின உயிமெய்க்கும் இடையில் வரும் எனத் தொல்காப்பியம் ஓரிடத்தைச் சுட்டுகின்றது. இக்கருதினையே வீரசோழியம் (எ.நூ.1) நேமிநாதம் (எ.நூ.17) சுவாமிநாதம் (எ.நூ.15) ஆகிய நூல்கள் வழிமொழிகின்றன. ஆனால் நன்னூலும் (எ.நூ.90) தொன்னூல் விளக்கமும் (எ.நூ.13) ஆய்தம் வல்லின உயிமெய்யினை இடமாகக் கொண்ட ஆறு இடங்களுடன் செய்யுள் விகாரம், புணர்ச்சி விகாரம் என்ற இரண்டினையும் இணைத்து எட்டு இடங்களைக் குறிப்பிடுகின்றன. இக்கருத்து மேலும் ஆய்வுக்குட்பட்டதாக அமைகின்றது. எனினும் ஆய்தம் குறிலுக்கும் வல்லின உயிர்மெய்க்கும் இடையிலும் புணர்நிலையிலும் எழுத்துச்சரியையிலும் கு.ர் எனும் பிறமொழி ஒலிகளைத் தமிழ்மொழியில் எழுதுவதற்கும் முறையே நுண்மையான ஓசையாகவும் இனிமையான ஓசையாகவும் நற்கருவியாகவும் பயன்படுகின்றது.

**ஆய்தக்குறுக்கம்**

தொல்காப்பியத்தில் (எ.நூ.370) ஆய்தம் தொடர்மொழியில் வரும் எனக் கூறியுள்ள கருத்தினை நேமிநாதம், சுவாமிநாதம், நன்னூல், தொன்னூல்விளக்கம் ஆய்தக்குறுக்கம் என்ற பெயரில் சார்பெழுத்துக்களுள் ஒன்றாக வகைப்படுத்துகின்றன. நேமிநாதமும், சுவாமிநாதமும், ஆய்தக்குறுக்கம் வருமிடத்தினை ஒன்று எனவும் நன்னூலும் தொன்னூல்விளக்கமும் இரண்டு எனவும் பகுத்துள்ளன.

**உயிர்மெய்**

தொல்காப்பியம் (எ.நூ.10.18) உயிரும் மெய்யும் கூடி ஒலிக்கும் இயல்பினையும் வடிவத்தினையும் குறிப்பிடுகின்றது. ஆயினும் உயிரும் மெய்யும் கூடும் கூட்டத்தினைத் தனி எழுத்தாகச் சுட்டவில்லை. வீரசோழியமும் (எ.நூ.5) தனி எழுத்தன்று எனக் கூறுகின்றது ஆனால் பிந்தைய நூல்கள் அனைத்தும் உயிர்மெய்யினைத் தனி எழுத்துக்களாகக் கூறுவதோடு சார்பெழுத்துக்களுள் ஒன்றாகவும் வகைப்படுத்தியுள்ளன.

மேலே நாட்டு மொழிகள் உயிரையும் மெய்யையும் தனித்தனியே தான் எழுதுகின்றன (வுயஅடை - வு - மெய் ய - உயிர் ). ஆனால் நம் தமிழ் மொழியில் உயிரையும் மெய்யையும் இணைத்து எழுதுகின்றோம். இவ்வாறு இணைத்து எழுதுவதினால் காலச்சுருக்கமும் இடச்சுருக்கமும் ஏற்படுகின்றது. எனவே தான் உயிரையும் மெய்யையும் இணைத்துச் சிறுசிறு மாற்றங்களைச் செய்து பயன்படுத்துகின்றோம். உயிர்மெய் தனி எழுத்தன்று, சுருக்கக் குறியீடுகளாகவே கருதுதல் நன்று.

**உயிரளபெடை**

தமிழ் மொழியில் ஓர் எழுத்து இரண்டு மாத்திரைக்கு மேல் ஒலிப்பதில்லை எனவும் இரண்டு மாத்திரைக்கு மேல் ஓர் எழுத்தை நீட்டி ஒலிக்க வேண்டுமானால் அவ்வெழுத்திற்கு அருகில் அவ்வெழுத்திற்கு இனமான குறில் எழுத்தினை நீட்டி ஒலித்தற்கு அடையாளமாகப் பக்கத்தில் எழுதிக் காட்டுதல் வேண்டும் எனத் தொல்காப்பியம் (எ.நூ.6) சுட்டுகின்றது. ஆனால் பிந்தைய நூல்களுள் முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் யாவும் உயிரளபெடையினையும் ஒற்றளபெடையினையும் சார்பெழுத்துக்களுள் ஒன்றாக எடுத்துரைக்கின்றன.

உயிரளபெடையின் வருகை நிலையினைக் கூறுமிடங்களில் இந்நூல்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. வீரசோழியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்கள் ஏழு எனவும் நன்னூல், தொன்னூல்விளக்கம் ஆகியன இருபத்தொன்று எனவும் நேமிநாதம் இருபத்தெட்டு எனவும் கூறுகின்றன. நெடில் ஏழும் அளபெடுக்கும் என்பதனால் ஏழு எனவும் நெடில் ஏழும் மொழிமுதல், இடை, கடை எனும் மூவிடங்களில் வருவதினால் இருபத்தொன்று எனவும் நெடில் ஏழும்

தனித்தும் மொழிமுதல், இடை, கடை என நான்கிடங்களிலும் வருவதினால் இருபத்தெட்டு எனவும் கூறுகின்றன. ஆயினும் ஔகாரம் மொழி இடையிலும் இறுதியிலும் வருவதில்லை எனவே உரையாசிரியர்கள் இவ்விருவிடங்களுக்காக இன்னிசையளபெடையையும் சொல்லிசையளபெடையையும் இணைத்துக் கூறுகின்றனர். எனவே இறைய பாடநூல்களில் உயிரளபெடையானது செய்யுளிசை, இன்னிசை, சொல்லிசை என மூவகைப்படுத்தப்பட்டுள்ளது

**ஒற்றளபெடை**

தொல்காப்பியம் (எ.நூ.33) " ஒற்றிசை நீடலும் உரித்தென மொழிப" எனச் சுட்டுகின்றது. இக்கருத்தினை அடிப்டையாகக் கொண்டு பிற்கால இலக்கண நூல்கள் முத்துவீரியம் தவிர்ந்த பிற நூல்கள் யாவும் ஒற்றளபெடையினைச் சார்பெழுத்துக்களுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றன. இந்நூல்கள் பதினோர் ஒற்றுக்கள் அளபெடுக்கும் எனச் சுட்டுகின்றன. மேலும் அதன் வருகையினைக் கூறுகையில் நேமிநாதம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்கள் பதினோர் இடங்களையும் நன்னூல், தொன்னூல்விளக்கம் ஆகியன இப்பதினோர் ஒற்றுக்களும் குறில்கீழும், குறிலிணைக்கீழும், மொழியிடையிலும், இறுதியிலும் அளபெடுக்கும் என நாற்பத்து நான்கு இடங்களைக் கூறுகின்றன. ஒற்றளபெடை செய்யுளில் மட்டுமே வரும். ஆனால் பேராசிரியர் சிறுபான்மை சுள்ள், கள்ள், துண்ண் என உலக வழக்கிலும் வரும் எனக் கூறுகின்றார்.

**குற்றியலுகரம்**

தொல்காப்பியத்தில் குற்றியலுகரமானது மொழிமுதல் குற்றியலுகரம், மொழியிறுதிக் குற்றியலுகரம் என்று இரண்டாகப் பகுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆயினும் மொழிமுதல் குற்றியலுகரத்திற்குத் தரும் சான்று நுந்தை எனும் முறைப்பெயராகும். இப்பெயரும் குற்றியலுகர இலக்கணத்திற்கு மாறாக மெல்லினமெய்மேல் உகரம் ஊர்ந்து வந்துள்ளது. எனவே பிந்தைய இலக்கணநூல்கள் யாவும் மொழிமுதல் குற்றியலுகரத்தினை விடுத்து, மொழியிறுதிக் குற்றியலுகரத்தினை மட்டுமே எடுத்துரைக்கின்றன.

தொல்காப்பியம் முதல், பிற்கால இலக்கண நூல்கள் யாவும் குற்றியலுகரத்தின் வருகை பற்றிக் கூறுகையில் நெட்டெழுத்தை அடுத்தும், இரண்டு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட எழுத்துக்களை அடுத்துச் சொல்லின் இறுதியில் வல்லின மெய்மேல் சேர்ந்து வரும் எனக் கூறுகின்றன. தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் போன்ற நூல்கள் குற்றியலுகரத்தினை ஒன்று எனக்கூற, நேமிநாதம், நன்னூல், தொன்னூல்விளக்கம் ஆகிய நூல்கள் குற்றியலுகரத்தினை இடத்தின் அடிப்படையில் முப்பத்தாறாகக் கணக்கிட்டுக் கூறுகின்றன.

இக்குற்றியலுகரமானது தொல்காப்பியக் காலத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளது. புணர்நிலையிலும் உகரத்திலிருந்து குற்றியலுகரமானது வருமொழி உயிர்வரின் மாறுபட்டமைகிறது. உகரம் புணரும் நிலையில் உடம்படுமெய்யாகவும் (அது + அன்று -- அதுவன்றி) குற்றியலுகரம் புணரும் நிலையில் மெய்விட்டுப்போகும் நிலையும் காணப்படுகின்றது. எனவே தான் குற்றியலுகரத்தினைத் தனி எழுத்தாகக் கருதி மெய்யெழுத்தினைப்போன்று புள்ளிபெறும் எனக் கூறுவதோடு, மொழியிறுதி எழுத்துக்களைக் கூறுமிடத்தில் குற்றியலுகரத்தினையும் ஓர் எழுத்தாக நன்னூல் (எ.நூ.107) சுட்டுகின்றது.

தமிழ் மொழியில் வல்லின மெய்கள் மொழியிறுதியில் உகரம் பெற்றே வருகின்றன. மொழியிறுதியில் வரும் மெய்களாகக் கூறப்படும் பிற மெய்களும் பேச்சு வழக்கில் உகரம் சேர்ந்தே ஒலிக்கப்படுகின்றன (கண்ணு, நில்லு, அவரு). தெலுங்கு மொழியில் எல்லா மெய்களும் உகரம் சேர்ந்தே மொழியிறுதியில் ஒலிக்கப்படுகின்றன.

**குற்றியலிகரம்**

தொல்காப்பியக் கருத்தினையே பிந்தைய இலக்கண நூல்கள் யாவும் எடுத்துரைக்கின்றன. தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்கள் குற்றியலிகரத்தின் வருகை நிலையை ஒன்று எனவும் நன்னூல், தொன்னூல்விளக்கம் ஆகியன இடத்தின் அடிப்படையில் முப்பத்தேழு எனவும் வகைப்படுத்துகின்றன.

**ஐகார, ஔகாரக் குறுக்கங்கள்**

தொல்காப்பியம் (எ.நூ.57) ஐகாரம் சொல்லில் வரும் நிலையில் ஒரு மாத்திரையாகக் குறுகி ஒலிக்கும் எனச் சுட்டுகிறது. ஆனால் பிந்தைய நூல்கள் யாவும் இக்கருத்தினை மையமாகக் கொண்டு ஐகாரம் குறுகுவதனை ஐகாரக்குறுக்கம் எனப் பெயரிட்டுச் சார்பெழுத்துக்களுள் ஒன்றாக இணைத்துவிட்டன. வீரசோழியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் போன்ற நூல்கள் ஐகார, ஔகாரக் குறுக்கங்களின் எண்ணிக்கையை ஒன்று எனக் கூற, நேமிநாதம், நன்னூல், தொன்னூல்விளக்கம் ஆகியன இடத்தின் அடிப்படையில் மூன்று எனக் கணக்கிடுகின்றன. மேலும் வீரசோழியம், நேமிநாதம் ஆகிய நூல்கள் ஐகாரக்குறுக்கத்தின் மாத்திரையை ஒன்றரை எனக் கூற, பிற நூல்கள் யாவும் ஒரு மாத்திரை எனச் சுட்டுகின்றன. ஔகாரக்குறுக்கம் ஓர் இடத்தில் மட்டும் வருமென நேமிநாதம் தவிர்ந்த பிற நூல்கள் கூறுகின்றன. நேமிநாதம் மட்டும் மூன்று இடங்களில் ஔகாரம் குறுகும் எனக் கூறினும் அதற்கான சான்றுகளைக் குறிப்பிடாது, வந்தவழி கண்டுகொள்க எனக் கூறுவது ஏற்புடைத்தன்று.

### மகரக்குறுக்கம்

தொல்காப்பியம் “அரையளவு குறுகல் மகரம் உடைத்தே” எனக் கூறுவதனைப் பிந்தைய இலக்கண நூல்கள் மகரக்குறுக்கம் எனப் பெயரிட்டுச் சார்பெழுத்துக்களுள் ஒன்றாக இணைந்துவிட்டன. நேமிநாதம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்கள் மகரக்குறுக்கத்தினை ஒன்று எனக் கூற நன்னூல், தொன்னூல்விளக்கம் ஆகியன மகரக்குறுக்கத்தினை மூன்று எனக் குறிப்பிடுகின்றன.

### முடிவுரை

தொல்காப்பியம் இடம், பற்றுக்கோடு என்ற அடிப்படையில் ஓர் எழுத்து மற்றோர் எழுத்தினைச் சார்ந்து வருவதனைச் சார்பெழுத்து எனச் சுட்டியது. தொல்காப்பியத்திற்குப் பிந்தைய இலக்கண நூல்கள் யாவும் ஓர் எழுத்து மற்றோர் எழுத்தினைச் சார்ந்து வருதல், மற்றோர் எழுத்தாக மாறுதல் மற்றும் ஒலி அளவில் நீண்டு ஒலித்தல், குறுகி ஒலித்தல் எனப் பல நிலைகளில் சார்பெழுத்துக்களை வகைப்படுத்தியுள்ளன. தொல்காப்பியம் சார்பெழுத்துக்களை மூன்று எனச் சுட்டியது. ஆனால் பிந்தைய நூல்கள் இரண்டு, ஒன்பது, பத்து என வகைப்படுத்தியுள்ளன. தொல்காப்பியம் சார்பெழுத்தாகக் கூறாத உயிர்மெய் வெறும் சுருக்கக் குறியீடே தவிரத் தனி எழுத்தன்று. ஆய்தக்குறுக்கம் என்பது வெறும் புணர்ச்சி மாற்றமாகவே அமைந்துள்ளது. ஐகார, ஔகார, மகரக் குறுக்கங்கள் எந்த எழுத்தினையும் சாராது வெறும் குறுக்கங்களாகவே காணப்படுகின்றன. எனவே பிந்தைய இலக்கண நூல்கள் கூறும் கருத்துக்கள் மேலும் ஆய்விற்குரியதாக அமைகின்றன.

### பார்வைநூல்கள்:

[1] தொல்காப்பியம் - தொல்காப்பியனார் இளம்பூரணர்உரை கழகவெளியீடு சென்னை, 1986.

[2] வீரசோழியம் -புத்தமித்திரனார், திரு.கா.ர.கோவிந்தராசமுதலியார் (பதிப்பாசிரியர்), கழகவெளியீடு, சென்னை, 1970.

[3] இலக்கணவிளக்கம் - வைத்தியநாததேசிகர், புலவர்சேயொளி (பதிப்பாசிரியர் கழகவெளியீடு சென்னை, 1973.

[4] நன்னூல் -பவணந்தி, காண்டிகையுரை, கழகவெளியீடு.

[5] நன்னூல்மூலமும்தெளிவுரையும் -சுயம்பு ஆர்ஆர்நிலையம் சென்னை, 2005

[6] தொன்னூல்விளக்கம் - வீரமாமுனிவர்.

[7] முத்துவீரியம் - முத்துவீரியஉபாத்தியாயர், கலகவெளியீடு.

[8] இலக்கணக்கொத்து - ஆறுமுகநாவலர் (பதிப்பாசிரியர்), வித்தியாநுபாலனஅச்சகம், சென்னை, 1956.

[9] தமிழ்இலக்கணநூல்கள் - ச.வே.சுப்பிரமணியன், மெய்யப்பன்பதிப்பகம், சிதம்பரம், 2013.

**1. சார்பெழுத்து அட்டவணை**

| சார்பெழுத்து | தொல் காப்பியம் | வீரசோ ழியம் | நேமிநா தம் | இலக்கண விளக்கம் | நன்னூல் | தொன்னூல் விளக்கம் | சுவாமிநாதம் | முத்துவீரியம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. உயிர்மெய் | - | - | 216 | 216 | 216 | 216 | 216 | 216 |
| 2. ஆய்தம் | 1 | 1 | 1 | 1 | 8 | 8 | 1 | 1 |
| 3. உயிரளபெடை | - | 7 | 28 | 7 | 21 | 21 | 7 | - |
| 4. ஒற்றளபெடை | - | - | 11 | 11 | 42 | 42 | 11 | - |
| 5. குற்றியலிகரம் | 1 | 1 | 36 | 1 | 37 | 37 | 1 | - |
| 6. குற்றியலுகரம் | 1 | 1 | 36 | 1 | 36 | 36 | 1 | - |
| 7. ஐகாரக்குறுக்கம் | - | 1 | 3 | 1 | 3 | 3 | 1 | - |
| 8. ஔகாரக்குறுக்கம் | - | 1 | 3 | 1 | 1 | 1 | 1 | - |
| 9. மகரக்குறுக்கம் | - | - | 1 | 1 | 3 | 3 | 1 | - |
| 10. ஆயதக்குருக்கம் | - | - | 1 | - | 2 | 2 | 1 | - |
| வகை | 3 | 6 | 10 | 9 | 10 | 10 | 10 | 2 |
| விரி | - | 12 | 336 | 240 | 369 | 369 | 241 | 217 |